# விவிலியத் திருநூலும் திருக்குறளும்

*முனைவர் கோ. மெர்லின் சலோமி*
உதவிப்பேராசிரியர் பொருளியல்துறை
போப் கல்லூரி சாயர்புரம்

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6491

***முன்னுரை***

*ஈராயிரம் ஆண்டுகளாக வாழ்வு பெற்றுள்ள மாண்புயர் நூல்களாகத் திருக்குறளும் விவிலியமும் திகழ்கின்றன. திருக்குறள் ஒரு தனி மனிதர் அருளிய தொகை நூல்.விவிலியம் அருளாளர் பலர் உருவாகக்கிய தொகை நூல். இந்த இரு நூல்களுக்கு்ம் பல்வேறு மொழி பெயர்ப்புகள் "தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இந்த இரு நூல்கள் "எல்லா நாட்டவராலும், எல்லா மொழியினராலும் விரும்பி ஏற்றுப் போற்றப்பட்டு வருகின்றன. ஈராயிரத்து எட்டு மொழிகளில் விவிலிய மொழிபெயர்ப்பு உள்ளதாக முனைவர் பா.வளன் அரசு கூறுகிறார். செவ்வியல் மொழிகள் முதலாகப் பண்படாத தீவுகளில் வாழும் மாந்தர் மொழிகள் ஈறாக ஈராயிரத்து எட்டு மொழிகளில் விவிலியம் தரப்பட்டுள்ளது. தொன்மை மிகு மொழிகளிலும் நரிக்குறவர் பேசும் வக்கிர போலியிலும் அண்மையில் எழுத்து வடிவம் பெற்ற சவுராட்டி ரத்திலும் திருக்குறள் மொழி பெயர்ப்புகள் வந்துள்ளன என்றும் முனைவர் பா.வளன் அரசு குறிப்பிடுகிறார்.*

**விவிலியமும் திருக்குறளும்**

திருக்குறளையும் விவிலியத்தையும் ஒப்பிட்டு அறிஞர் பெருமக்கள் பலர் ஆராய்ச்சிக் கருத்துக்களையும் தந்துள்ளனர்.

விவிலியத்திலும் திருக்குறளிலும் பல கருத்துகக்ள் ஒத்தவையாக உள்ளன. உலகெங்கும் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள் (மாற்கு 16.15) என்னும் இயேசு பெருமானின் அருள்வாக்கு விவிலியத்தில் உள்ளது. இவ்வாறு உலகு எங்கும் என்று கூறுவதனால் உலக மக்கள்'அனைவருக்கும் உரிமையாகும் என்று உணர்த்துகிறது. இதையே திருவள்ளுவரின் திருக்குறளிலும் காணலாம்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்.**

வையத்தில் வாழ வேண்டிய நெறிப்படி வாழ்பவன் வான் உலகில் உள்ள தெய்வத்திற்குச் சமம் ஆவான்.

**இறையியல் கோட்பாடுகள்**

இறைவன் யுத மக்களின் குருவாகிய மோசேக்கு அளித்த பத்துக் கட்டளைகளிலும் திருக்குறள் ஒத்து வருகிறது. முதல் கட்டளை உன்னிடத்தில் நீஅன்பு காட்டுவது போன்று பிறனிடத்திலும் அன்பு காட்டுவாயாக.

இதுவே முதன்மையான கட்டளை என்று இயேசு பெருமான் கூறுகிறார்.

எவற்றின் மீதும் பற்று வைக்காமல் இருப்பவரிடம் நாம் அன்பு செலுத்த வேண்டும், அந்த அன்பு தொடர வேண்டும்.

விவிலியத்தில் உன் தந்தையையும்,உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்று கூறப்பட்டுள்ளது.

இதையே திருவள்ளுவரும் மக்கட்பேறு, பெரியாரைத் துணைக்கோடல் ஆகிய அதிகாரங்களில் தந்தை தாயாரைப் பேணும் கட்டளையாகக் குறிப்பிடுகிறார்.

அடுத்ததாக,விவிலியத்தில் பிறருக்குள்ள எதையும் விரும்பாதிருப்பாயாக என்று உள்ளது. திருக்குறளும் இதையே வலியுறுத்துகிறது.

***பிறர்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு***
***அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு***

பிறருடைய வாழ்க்கைத் துணையை விரும்பி ஏறெடுத்துப் பார்க்காத அரிய செயல்சிறப்பான குணம் ஆகும். அடுத்ததாக விவிலியத்தில் பத்துக் கட்டளைகளில் பொய் சொல்லாதே என்று இறைவன் கூறியுள்ளார்.

***ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன்***
***பின்சாரப் பொய்யாமை நன்று***

***(திருக்குறள் 323)***

இதில் பிற உயிரைக் கொல்லாமலும் பொய் பேசாமலும் இருப்பது நல்ல குணமாகும் என்கிறார்.

விவிலியத் திருநூலில் அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் என்று (மத்தேயு 7:20) உள்ளது.

***திருக்குறளும் இதே கருத்தை விளம்புவது சிந்திக்கத்தக்கது***

***தக்கார் தகவிலர் என்பது அவரவர்***
***எச்சத்தாற் காணப்படும்***

***(திருக்குறள் 114)***

***பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும்***
***தத்தம் கருமமே கட்டளைக் கல்***

*(திருக்குறள் 505)*

பெருமைக்கும் சிறுமைக்கும் உரைகல்லாக இருப்பது அவருடைய செயல்களே ஆகும்.

விவிலியத்தில், இயேசு பெருமான் தனது தந்தையைப் பார்த்து பிதாவே இவர்'களை மன்னியும் என்கிறார்.

***இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்***
***என்ன பயத்ததோ சால்பு***

***(திருக்குறள் 987)***

இதில் துன்பம் செய்தவருக்கும் நல்லது செய்யவேண்டும் என்று உள்ளது. அடுத்ததாக,

பெருந்தீனி பாவம் என்று விவிலியம் கூறுகிறது. அதையே திருவள்ளுவர் தெளிவுறுத்துகிறார்.

***அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு***
***பெற்றான் நெடிதுய்க்கு மாறு***

***(திருக்குறள 943)***

***இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல்***
***நிற்கும் கழிபேர் இரையாண்கண் நோய்***

***(திருக்குறள் 946)***

முதலில் உண்ட உணவு செரிக்க வேண்டும் அதன்பின் அளவோடு உண்ண வேண்டும். விலங்குபோல மிகுதியான உணவை உண்பவனிடத்து நோய் நிலைத்து நிற்கும் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

விவிலியத் திருநூலும் திருவள்ளுவரின் முப்பாலும் உலகமக்களால் விரும்பிப் படிக்கப்படும் பனுவல்கள் ஆகும். விவிலியம் இரண்டாயிரத்து நூறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. வள்ளுவம் நூற்று நாற்பத்தொன்று மொழிகளில் இடம் பெற்றுள்ளது. விவிலியம் எழுபத்து மூன்று ஏடுகளாக அமைந்துள்ளது. வள்ளுவம் நூற்று முப்பத்துமூன்று இயல்களுடன் விளங்குகிறது. விவிலியம் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகிய இரு கூறுகள் கொண்டது. வள்ளுவம் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகிய மூன்று பகுப்புகளுடன்மிளிர்கின்றது.

விவிலியம் 1450 ஆம் ஆண்டு கூட்டன்பர்க்கு அச்சகத்தின் வாயிலாக வெளிவந்து ஒளி தந்துள்ளது. திருக்குறள் 1812 ஆம் ஆண்டு மாச தினசரி அச்சகத்தின் வாயிலாக வெளிவந்து ஒளி தங்கியுள்ளது. 1714ஆம் ஆண்டு விவிலியத்தை முதலில் தமிழில் தந்தவர் சீகன்பால்கு என்ற செருமானியர், திருக்குறளை இலத்தீனில் 1730 ஆம் ஆண்டு வழங்கியவர் வீரமாமுனிவர் என்ற இத்தாலியர்.

உலக வரலாற்றில் நடு நாயகமாகத் திகழ்பவர் இறைமகன் இயேசு. கிறித்துவுக்கு முற்பட்ட காலம் கிறித்துவுக்கு பிற்பட்ட காலம்என்று உலக வரலாறு அமைகிறது.

விவிலியத் திருநூல் கிறித்தவர் வேதப் புத்தகமாக விளங்குகிறது. எனினும் அண்ணல் காந்தியடிகள், வீரத்துறவி விவேகானந்தர் உலகம் சுற்றிய தமிழர் சுத்தானந்த பாரதியார். தமிழ்த் தென்றல் திரு.வி.கலியாண சுந்தரனார், பண்ணரசன் கண்ணதாசன் போன்றோரால் ஏற்றுப் போற்றப்படுவது கருதத்தக்கது.

வள்ளுவப் பெருநூலைச் சோவியத்து எழுத்தாளர் தால்கதாய் செருமானிய மருத்துவர் ஆல்பர்ட்டு சுவைட்சர், இத்தாலிய அறிஞர் வீரமாமுனிவர் இங்கிலாந்து பேராசிரியர் சார்ச்சு யுக்ளோ போப்பு போன்றோர் ஏற்றுப் பாராட்டி வியந்து புகழ்நது ்ளள்னர்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்று பாட்டுக்கொரு புலவர் சுப்பிரமணிய பாரதியார் பறைசாற்றினார். வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே என்று பாவேந்தர் பாரதிதாசன் போற்றி மகிழ்ந்தார். திருக்குறள் தமிழ்த் தாயின் உயிர்நிலை என்று தெளிவுறுத்தினார் கவிமணி தேசிய விநாயகம், ஆங்கில பேராசிரியர் முந்நீர்ப்பள்ளம் புரணிலிங்கம் திருக்குறள் உலகச் சட்ட நூல் என்று எழுதியுள்ளார். திருக்குறள் உலகப் பொது மறையாகப் போற்றப்படுகிறது. உலக நாடுகளின் பேரவையின் ஒரு கூறாக விளங்கும் பன்னாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டுப் பேரவை உலக நூல் திருக்குறள் என்று அறிவிப்பதாகத் தெரிவித்துள்ளது.

## முடிவுரை

திருவிவிலியத்துக்கும் திருக்குறளுக்கும் உள்ள நெருங்கிய ஒப்புமைகளை புகழ்ந்து மகிழ்ந்திடும் வண்ணம் எழுதி வருவது கருதத்தக்கது. வழிபாட்டுத் தலங்களில் விவிலிய விளக்கவுரைகள் வழங்கும்போது திருக்குறள் மேற்கோள்களைத் தந்து பெருமிதம் எய்துகின்றனர்.

## துணைநூல் பட்டியல்

1. சகந்நாதன்.கி.வா. திருக்குறள் ஆராயச்சிப் பதிப்பு இராமகிருட்டிணன் வித்தியாலயம் பெரிய நாயக்கன் பாளையம் கோயம்புத்தூர்
2. மரியானுசு ஆரோக்கியசாமி திருவிவிலியம் தமிழ்நாடு, விவிலிய மறைக்கல்வி மையம், திண்டிவனம்